## தி.மு.கழக இளைஞர் அணி வடக்கு மண்டலத்தைச் சேர்ந்த 1,30,000 நிர்வாகிகளுடன் சந்திப்பு:

# நம்முடைய எதிரிகள் போடுகின்ற தப்புக் கணக்கை சுக்கு நூறாக உடைக்கின்ற கூட்டம், நம் இளைஞர் அணிக் கூட்டம்!

## திருவண்ணாமலையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!



**திருவண்ணாமலை, டிச.16 —**

**திருவண்ணாமலை, கலைஞர் திடலில் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டலத்தைச் சேர்ந்த 1,30,000 நிர்வாகிகளுடனான சந்திப்பு, நேற்று முன்தினம் மாலை கோலாகலமாக நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரை ஆற்றினார்.**

**அப்போது அவர் "இது ஏதோ கணக்குக் காட்டுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டம் கிடையாது. நம்முடைய எதிரிகள் போடுகின்ற தப்புக் கணக்கை சுக்கு நூறாக உடைக்கின்ற கூட்டம், இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர் அணிக் கூட்டம், கொள்கைக் கூட்டம்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:**

"கழகத்தின் முதன்மை அணியாம் இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியின் மூலம் உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

### நிச்சயம் அமையும்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை, சேலத்தில் வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். அதன் பிறகு வந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நமக்கு மிகப்பெரிய வெற்றியை, தமிழ்நாட்டு மக்கள் கொடுத்தார்கள். இங்கே திரண்டு இருக்கக்கூடிய இந்த லட்சக்கணக்கான இளைஞர் அணி நிர்வாகிகளைப் பார்க்கும் போது, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் அதே வெற்றியை நீங்கள் நிச்சயம் நம் தலைவருக்குக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயம் இருக்கிறது. அந்த வெற்றிக்கு இந்த நிர்வாகிகள் சந்திப்பு, மிக மிக முக்கியமான ஒரு காரணமாக நிச்சயம் அமையும்.

இன்று பல கட்சிகள், இயக்கங்கள் உறுப்பினர்கள் சேர்க்கவே தடுமாறிக் கொண்டிருக்கும் போது, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம் இளைஞர் அணி ஒவ்வொரு பூத் வரையிலும் நிர்வாகிகளை நியமனம் செய்திருக்கிறது. அந்த வகையில், இன்று 91 சட்டமன்றத் தொகுதிகளில் மாவட்டம், மாநகரம், ஒன்றியம், நகரம் முதல் பாகம் வரை, பூத் வரையிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர் என ஒரு லட்சத்து 30 ஆயிரம் நிர்வாகிகள் இந்தச் சந்திப்புக்கு நீங்கள் வருகை தந்திருக்கிறீர்கள்.

### சிறப்பான ஏற்பாடு

இந்தச் சந்திப்புக்கு அனுமதி வழங்கிய நம்முடைய கழகத் தலைவர் அவர்களுக்கு முதலில் இளைஞர் அணியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல கழகத்தின் பொதுச் செயலாளருக்கும், முதன்மைச் செயலாளருக்கும், வந்திருக்கக்கூடிய அனைத்து துணைப் பொதுச் செயலாளர்களுக்கும், இந்தச் சந்திப்பை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய உங்கள் மாவட்ட அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும் இளைஞர் அணியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சந்திப்பைச் சாத்தியப்படுத்திய அனைத்து அமைச்சர்கள், மாவட்டப் பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள், அனைத்து மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வந்திருக்கக்கூடிய அனைத்து இளைஞர் அணித் தம்பிகளையும், சகோதரர்களையும் இளைஞர் அணிச் செயலாளராக உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன். என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருவண்ணாமலையில் கடல்

திருவண்ணாமலையில், மலை இருப்பது எல்லாருக்குமே தெரியும். ஆனால், மலை மட்டுமல்ல, இங்கு திருவண்ணாமலையில் கடலும் இருக்கிறது என்கிற அளவுக்கு, இங்கே கடல் போலக் கூடி இருக்கக்கூடிய என்னுடைய இளைஞர் அணித் தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நின்ற தேர்தலிலெல்லாம் வென்ற தலைவர் கலைஞர். அவர் வழியில், இன்று, தான் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, இந்த இயக்கம் சந்தித்த அனைத்துத் தேர்தலிலும் வெற்றியை மட்டுமே கொடுத்திருக்கக்கூடிய நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் இங்கே பெருமையோடும், பூரிப்போடும் உட்கார்ந்திருக்கிறார்.

### கொள்கை வாரிசுகள்

சேலம் இளைஞர் அணி மாநாட்டில் தலைவர் பேசும்போது என்ன சொன்னார்? நான் கழகத் தலைவராக மட்டும் உங்களை வாழ்த்தவில்லை. உங்களுடைய தந்தையாக நான் வாழ்த்துகிறேன் என்று தலைவர் சொன்னார். ஏனென்றால், உதயநிதி மட்டும் என்னோட பிள்ளை கிடையாது, என் வாரிசு கிடையாது. இங்கு கூடி இருக்கக்கூடிய லட்சோப லட்ச இளைஞர்களும் என்னுடைய வாரிசு, என்னுடைய கொள்கை வாரிசு என்று தலைவர் அவர்கள் நம்மைப் பாராட்டினார். அப்படிப்பட்ட கொள்கை வாரிசுகளாக நாம் இங்கே எழுச்சியோடு கூடி இருக்கின்றோம்.

இன்று மாநாடு என்றால், பல கட்சிகளில் ஆயிரக்கணக்கில் கூட இல்லை, நூற்றுக்கணக்கில் இளைஞர்களைத் திரட்டுவது சவாலானது இல்லை. ஆனால், நம்முடைய கழகத்தில் மட்டும்தான் இளைஞர் அணி நிர்வாகிகளையே கிட்டத்தட்ட ஒரு மாநாடு போல நாம் இங்கு கூட்டி இருக்கிறோம். இந்தியாவிலேயே வேறு எந்த இயக்கமும் செய்யாத சாதனையை நாம் செய்து காட்டி இருக்கிறோம். இது ஏதோ கணக்குக் காட்டுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டம் கிடையாது. நம்முடைய எதிரிகள் போடுகின்ற தப்புக் கணக்கை சுக்கு நூறாக உடைக்கின்ற கூட்டம், இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி கூட்டம், கொள்கைக் கூட்டம்.

பொதுவாக இளைஞர்கள் அதிகமாகக் கூடினால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது, கட்டுப்பாடு இருக்காது என்ற ஒரு பிம்பம் இப்போது வந்திருக்கிறது. காட்டாற்று வெள்ளம் மாதிரி போய்க் கொண்டே இருப்பார்கள். யார் கட்டுப்பாட்டிலும் இருக்க மாட்டார்கள் என்ற ஒரு பிம்பம் இன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது. அவர்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்று சொல்வார்கள். ஆனால், நம்முடைய கழக இளைஞர் அணியினர் அப்படி கிடையாது. மிகுந்த கட்டுப்பாடு மிக்கவர்கள் என்பதற்கு இங்கே கூடி இருக்கக்கூடிய இந்தக் கூட்டம் சாட்சி.

கட்டுப்பாடு இல்லாமல் ஒரு லட்சம் அல்ல, ஒரு கோடி இளைஞர்களைத் திரட்டினாலும், அதனால் யாருக்கும் எந்தப் பயனும் கிடையாது. அப்படிப்பட்ட கட்டுப்பாடு இல்லாத கூட்டத்தை வைத்துக் கொண்டு யாராலும் எதையும் சாதிக்கவும் முடியாது. ஆனால் உங்களைப் போல கட்டுப்பாட்டோடு இருக்கக்கூடிய இந்தக் கூட்டம், கொள்கைக் கூட்டம் கழகத்திற்கு மட்டுமல்ல, இன்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்குமே மிகப்பெரிய ஒரு பலம் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

மற்ற இயக்கங்களில் எல்லாம் தொண்டர்கள் இருப்பார்கள், நிர்வாகிகள் இருப்பார்கள், தலைவர்கள் இருப்பார்கள், பொறுப்பாளர்கள் இருப்பார்கள். ஆனால், உண்மையான அன்புடன் 'உடன்பிறப்பே' என்று கூப்பிடுகின்ற கூட்டம், நம்முடைய தி.மு.க.வில் மட்டும்தான் இருக்கிறது.

இன்று நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளைக் கடந்து 76வது ஆண்டில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 75 ஆண்டுகளில் உடன்பிறப்புகள் சிறைகளுக்குப் போயிருக்கிறார்கள், சித்திரவதைகளை அனுபவித்திருக்கிறார்கள். ஏன்? மொழிக்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய உடன்பிறப்புகளாக இருக்கட்டும், இளைஞர் அணித் தம்பிகளாக இருக்கட்டும், எந்த நேரத்திலும் களத்திலிருந்து பின் வாங்கியது கிடையாது.

ஆதிக்கத்துக்கு அடிபணிந்தது கிடையாது. எந்த நேரத்திலும் சுயமரியாதையை விட்டுக் கொடுத்தது கிடையாது. அப்படிப்பட்ட தி.மு.க.வை இன்று சில பேர் மிரட்டிப் பார்க்கிறார்கள். குறிப்பாக, குஜராத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் நமக்கெல்லாம் ஒரு சவால் விடுத்திருக்கிறார். 'பீகாரில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம். அடுத்து எங்களுடைய இலக்கு தமிழ்நாடு ' என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் பேசுகிறார். நான் அமித்ஷா அவர்களுக்கும், அவருடைய அடிமைக் கூட்டத்திற்கும் சொல்கிறேன்.

நீங்கள் எவ்வளவு சீண்டினாலும், எவ்வளவு மிரட்டினாலும் அதை எதிர்கொள்வதற்கு எங்களுடைய கருப்பு சிவப்புப் படை, எங்களுடைய இளைஞர் அணிப் படை என்றைக்கும் களத்தில் தயாராக இருக்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949இல் நம்முடைய இயக்கத்தை ஆரம்பிக்கும்போது சொல்லிவிட்டுத்தான் ஆரம்பித்தார். என்ன சொன்னார்? டெல்லியின் ஆதிக்கத்தை எதிர்க்கத்தான் நாங்கள் வருகிறோம் என்று சொல்லிவிட்டுத்தான் கருப்பு சிவப்பு கொடியை ஏற்றினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அன்று ஆரம்பித்தது இன்று வரைக்கும் தமிழ்நாட்டைக் காப்பாற்றுவதற்கான அந்தப் போர்க்களத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் முன்வரிசையில் இருந்து வருகிறது.

இந்தப் போர்க்களத்தில் எதிரிகள்தான் மாறி மாறி வந்திருக்கிறார்களே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே அதே வலிமையோடுதான் இருந்து வருகிறது. ஏனென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னமாதிரி தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்கு அவுட் ஆஃப் கன்ட்ரோல்தான். அப்படிப்பட்ட நம்மைப் பார்த்துத் 'தயாராக இருங்கள், நாங்கள் தமிழ்நாட்டுக்கு வருகிறோம்' என்று மிரட்டிப் பார்க்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ ஆட்சி அதிகாரத்துக்கு வர வேண்டும், பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று உருவாக்கப்பட்ட இயக்கம் கிடையாது. இது தமிழ்நாட்டு மக்களை, தமிழினத்தைக் காப்பாற்றுவதற்காகத் துவங்கப்பட்ட இயக்கம்.

### நெருப்பாற்றில் நீந்தி வந்த இயக்கம்

மிசா என்னும் நெருப்பாற்றில் நீந்தி வந்த இயக்கம். உலக வரலாற்றிலேயே ஈடு இணை இல்லாத மொழிப்போரை நடத்தி, அதிலும் வெற்றி பெற்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தமிழ் மொழிக்காகத் தண்டவாளத்தில் தலை வைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். பல துரோகங்களை, பல அடக்குமுறைகளையும் வீழ்த்திய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இப்படிப்பட்ட எங்களைப் பார்த்து குஜராத்தில் உட்கார்ந்து மிரட்டிப் பணிய வைக்கலாம் என்று நினைத்தால், நிச்சயம் அது உங்கள் கனவில் கூட நடக்காது.

இங்கு கூடி இருக்கக்கூடிய இளைஞர் அணித் தம்பிகளும், தலைவரின் உடன்பிறப்புகளும் இருக்கும் வரை நிச்சயம் அதை நடக்க விட மாட்டார்கள். ஆகவே, கடைசி உடன்பிறப்பு இருக்கும் வரைக்கும் தமிழ்நாட்டைச் சங்கி கூட்டத்தால் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது. நீங்கள் பீகாரில் வெற்றி பெற்றிருக்கலாம். உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் என்று வடநாட்டில் நீங்கள் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டுக்குள் எளிதாக நுழைந்துவிடலாம் என்று தப்புக் கணக்குப் போடுகிறீர்கள். நிச்சயம் அது நடக்காது. ஏனென்றால் தமிழ்நாட்டுக்கென்று ஒரு தனித்துவம் இருக்கிறது.

> **வா**னவில் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். வண்ண வண்ணமாக இருக்கும். அதைப் பார்ப்பதற்கு மக்கள் கூடுவார்கள். ஆனால், அது நிச்சயம் நிரந்தரம் கிடையாது. உதயசூரியன் மட்டும்தான் நிரந்தரம். உதயசூரியன்தான் மக்களுக்கான வெளிச்சத்தைத் தரும். ஆகவே நம் கழகத்தின் வரலாற்றை, நம் ஆட்சியின் சாதனைகளை, தலைவரின் வரலாறு, பெருமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

### மதம் பிடித்த யானை

தந்தை பெரியார் என்கிற கொள்கை நெருப்பு தமிழ்நாட்டை என்றைக்கும் சுற்றி நின்று காத்துக் கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோர் இன்றைக்கும் உணர்வாக இருந்து நம்முடைய தமிழ்நாட்டை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தைப் பாதுகாக்க தன் 23 வயதிலேயே மிசா கொடுமைகளை எதிர்கொண்ட கழகத் தலைவர் அவர்கள் நம்மை வழி நடத்த இன்று இங்கே இருக்கிறார்கள். பா.ஜ.க. என்பது மதம் பிடித்து ஓடுகின்ற யானை என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்த யானையை அடக்குகிற அங்குசம் இதோ இங்கே இருக்கக் கூடிய நம்முடைய கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கைகளில் நிச்சயம் இருக்கிறது.

### மக்களோடு இருக்கிறோம்

இது மோடிக்கும் தெரியும், அமித்ஷாவுக்கும் தெரியும். அதனால்தான் நேராக வந்தால், வெற்றி பெற முடியாது என்று இன்று பழைய அடிமைகளையும் புது அடிமைகளையும் துணைக்கு அழைத்துக் கொண்டு நம்மோடு மோதப் பார்க்கிறார்கள். பழைய அடிமைகள், புதிய அடிமைகள் மட்டுமல்ல, இன்று சி.பி.ஐ., ஐ.டி., வருமான வரித்துறை, ஏன் தேர்தல் ஆணையம் இப்படி அனைவரோடும் கூட்டணி வைத்து, பாசிச பா.ஜ.க. கூட்டு சேர்ந்து, தமிழ்நாட்டுக்குள் நுழையப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட பா.ஜ.க.வை நம்பித்தான் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் தேர்தல் களத்துக்கு வந்திருக்கிறார். ஆனால், நாம் அப்படி இல்லை. முழுக்க முழுக்கக் கழகத்தின் தொண்டர்களையும், இளைஞர் அணித் தம்பிகளையும், தமிழ்நாட்டு மக்களையும் நம்பி நாம் களத்துக்கு வந்திருக்கிறோம். நாம் தொடர்ந்து மக்களோடு இருக்கிறோம். மக்களும் தொடர்ந்து நம்மோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம்.

நான்கு நாட்களுக்கு முன்பு சென்னையில் அ.தி.மு.க.வின் பொதுக்குழு கூடியது. அதில் ஒரு தீர்மானம் போட்டார்கள். 2026இல் எடப்பாடி பழனிச்சாமி அவர்களை முதலமைச்சராக்குவோம் என்று அடிமைகள் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். பொதுவாக காரில் பேட்டரி செயலிழந்தால், அதை நான்கு பேர் தள்ளிவிட்டு ஸ்டார்ட் செய்யலாம். ஆனால், காரில் இன்ஜினே இல்லை என்றால் எவ்வளவு தள்ளினாலும், அது ஸ்டார்ட் ஆகாது. இன்ஜின் இல்லாத கார்தான் இன்று இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

இப்போது பா.ஜ.க. என்ற லாரி அந்த இன்ஜின் இல்லாத காரை எப்படியாவது கட்டி இழுத்துக்கொண்டு போகப் பார்க்கிறது. இன்று எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் நீதித்துறையைக் காப்பாற்ற வேண்டும், தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்கிறார். முதலில் அவர் காப்பாற்ற வேண்டியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, பா.ஜ.க.விடமிருந்து காப்பாற்ற வேண்டும்.

இன்று கட்சியிலிருந்து ஒவ்வொருவராக வெளியே சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் என்ன சொல்கிறார், யார் வேண்டுமானாலும் வாருங்கள், யார் வேண்டுமானாலும் போங்கள், நான் மட்டும்தான் நிரந்தரப் பொதுச் செயலாளர். இதுதான் எடப்பாடி பழனிசாமி என்று. இது அவர்களுக்கு மட்டும் தேவை அல்ல, நமக்கும் அதுதான் தேவை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

எடப்பாடி பழனிசாமி அவர்களே உங்களிடம் ஒரேயொரு விஷயத்தைச் சொல்கிறேன். அடிமையாக இருந்து சுகமாக வாழ்வதைவிட, சுயமரியாதையோடு, சுதந்திரமாக வாழ்வதுதான் முக்கியம். இதோ இங்கே இருக்கக்கூடிய எங்கள் லட்சக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணித் தம்பிகள், கருப்பு சிவப்பு இளைஞர்கள் சுதந்திரமாக இருக்கிறோம். குறிப்பாக, சுயமரியாதையோடு இருக்கிறோம். அதனால்தான் இன்று நம்மை நோக்கி தமிழ்நாட்டு இளைஞர்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய ஆதரவைத் தருகிறார்கள்.

பாசிச சக்திகளிலிருந்து தமிழ்நாட்டைக் காக்கின்ற ஆற்றல் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மட்டும்தான் உண்டு என்று இன்று தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் நம்புகிறார்கள். மக்களுக்கு அந்த நம்பிக்கையை விதைத்தவர், அந்த நம்பிக்கையைப் பெற்ற தலைவர் நம் கழகத் தலைவர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.

### அசைக்க முடியாத நம்பிக்கை

கழகத் தலைவர் அவர்கள் மீது மக்களுக்கு இருக்கக்கூடிய அந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான், பாசிச சக்திகளையும், அடிமைக் கூட்டத்தையும், அவர்களின் கண்களையும் உறுத்திக் கொண்டிருக்கிறது. அதனால்தான் அமைதிப் பூங்காவாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டில் எப்படியாவது நுழைந்து, ஏதாவது ஒரு கலவரத்தைச் செய்யலாம் என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாசிசக் கலவர சக்திகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பாக, இளைஞர் அணித் தம்பிகள் நாம் அத்தனை பேரும் சொல்வோம், ``We will never allow you. We are ready to face the consequences." நாங்கள் உங்களை நிச்சயம் தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டோம். அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை நிச்சயம் களத்தில் சந்திப்போம்.

தமிழ்நாட்டில் நடந்து வருகின்ற ஆட்சி சமூக நீதியை, சமத்துவத்தை, மதச்சார்பின்மையை, பெண் உரிமையைக் காக்கின்ற ஒரு ஆட்சி. இப்படிப்பட்ட நம்முடைய கழக ஆட்சியை மீண்டும் கொண்டு வர வேண்டியது நம் பொறுப்பு. குறிப்பாக, இளைஞர் அணித் தம்பிமார்களின் கடமை. இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு அந்தக் கடமை அதிகமாக இருக்கிறது.

இந்த நேரத்தில் தலைவர் அவர்களுக்கும், கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்களுக்கும், இளைஞர் அணியின் சார்பாக ஒரு அன்பான வேண்டுகோள். நிச்சயம் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எங்களின் இளைஞர்களுக்கு நீங்கள் போட்டியிட அதிகமாக வாய்ப்பைத் தர வேண்டும். இளைஞர் அணிக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இளைஞர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். இளைஞர் அணி சார்பாக, என்னென்ன பணிகள் எல்லாம் செய்திருக்கிறோம் என்று நம் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்கள் இங்கே பேசினார்கள். இவ்வளவு நாளாக நாம் என்ன செய்தோம் என்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல இனிமேல் என்ன செய்யப் போகிறோம் என்பதும் மிக மிக முக்கியம்.

### சட்டமன்றத் தேர்தல் பணி

அப்படி நமக்கு முன் இருக்கக்கூடிய முதல் பணி, அடுத்த முக்கியமான பணி 2026 சட்டமன்றத் தேர்தல் பணி. அடுத்து வருகிற நான்கு மாதங்களுக்கு நாம் அதை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும். களத்தில் கடுமையாக உழைக்க வேண்டும். அடுத்த தலைமுறை இளைஞர்களைச் சந்தித்துப் பேச வேண்டும். உங்களின் நண்பர்களைச் சந்தித்துப் பேச வேண்டும். அவர்களுக்கு அரசியல் பற்றிய புரிதல் வர வேண்டும். யார் வேண்டுமானாலும், இடையில் வரட்டும், போகட்டும். அதைப்பற்றிக் நமக்குக் கவலை வேண்டாம்.

வானவில் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். வண்ண வண்ணமாக இருக்கும். அதைப் பார்ப்பதற்கு மக்கள் கூடுவார்கள். ஆனால், அது நிச்சயம் நிரந்தரம் கிடையாது. உதயசூரியன் மட்டும்தான் நிரந்தரம். உதயசூரியன்தான் மக்களுக்கான வெளிச்சத்தைத் தரும். ஆகவே நம் கழகத்தின் வரலாற்றை, நம் ஆட்சியின் சாதனைகளை, தலைவரின் வரலாறு, பெருமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் தெருவில் இருக்கக்கூடிய 10, 20 இளைஞர்களை நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு வாருங்கள். நீங்கள் சொன்னால் கேட்கிற மாதிரி இருக்க வேண்டும். 10 வீட்டுக்கு, 20 வீட்டுக்கு நான் பொறுப்பு, இந்தத் தெருவில் இருக்கிற வாக்குகளுக்கு நான் பொறுப்பு என்று அந்த இலக்கை நிர்ணயம் செய்து இளைஞர் அணித் தம்பிகள் வேலை செய்ய வேண்டும். அனைவரிடமும் நெருங்கிப் பழகி மக்களோடு மக்களாகப் பழக வேண்டும். அவர்களுக்குத் தேவையானதைச் செய்து கொடுங்கள்.

தமிழ்நாட்டில் எந்த வீட்டை எடுத்துக் கொண்டாலும், நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயனடைந்த, ஒரு பயனாளியாவது நிச்சயம் இருப்பார். அதை மக்களிடம் தொடர்ந்து ஞாபகப்படுத்துங்கள். திட்டங்களை எடுத்துப் பேசுங்கள். மக்களைச் சந்தித்து மக்களோடு மக்களாகப் பழகுங்கள். அவர்களின் நம்பிக்கையைப் பெறுங்கள். இந்தப் பணிகள் எல்லாம் நாம் சரியாகச் செய்தால், நிச்சயம் நம் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கப் போவது உறுதி. நம் கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்காரப் போவது உறுதி.

### நிர்வாகிகள் ஒரு அடித்தளம்

நாம் பெறப் போகிற வெற்றி சாதாரண வெற்றியாக இருக்கக் கூடாது. 70,000 பூத் இடங்களிலும் நிச்சயம் உதயசூரியன் வெற்றி பெற்றாக வேண்டும். 70,000 பூத் இடங்களிலும் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். நம்முடைய தோழமைக் கட்சிகளின் வெற்றியை உறுதி செய்ய வேண்டும். அதற்கு இந்த இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிச்சயம் ஒரு அடித்தளமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இங்கே வந்திருக்கக்கூடிய இளைஞர் அணித் தம்பிமார்கள் நீங்கள் திரும்பிப் போகும்போது, ஒவ்வொரு இளைஞர் அணி நிர்வாகியும் அந்த உறுதியோடும், நம்பிக்கையோடும் நீங்கள் செல்ல வேண்டும். திருவண்ணாமலையில் கூடினோம், இதனால் தமிழ்நாட்டில் திக்கெட்டும் வென்றோம் என்று நாளைய வரலாறு சொல்ல வேண்டும்.

இந்த நேரத்தில் இறுதியாக ஒரேயொரு விஷயத்தைத் தலைவரிடம் சொல்ல விரும்புகிறேன். இளைஞர் அணித் தம்பிகளுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இரண்டாம் உலகப் போர் சமயத்தில் ஜெர்மனியின் படையெடுப்பைத் தாக்குப்பிடிக்க முடியாமல், எதிரிலிருந்த எல்லா நாடுகளும் ஜெர்மனியிடம் சென்று சரணடைந்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட ஜெர்மனியையே எதிர்த்து நின்றது ஒரேயொரு ரஷ்ய நகரம். அந்த நகரம்தான் தோற்கடித்தது. அந்த நகரத்தின் பெயர் ஸ்டாலின்கிரேட்.

அதேபோல, நம் நாட்டில் பாசிஸ்டுகளுக்கு எதிரான போரில் இந்தியாவின் ஸ்டாலின்கிரேடாக இருந்து நம் தமிழ்நாடு களத்தில் நின்று ஜெயித்துக் காட்ட வேண்டும். நம் தலைவர் தலைமையையே மீண்டும் கொண்டு வர வேண்டும். அதற்கு இங்கு கூடியிருக்கக்கூடிய லட்சோப லட்ச இளைஞர் அணிப் பட்டாளம், நம் தலைவர் அவர்களின் கரங்களை நாம் வலுப்படுத்த வேண்டும்.

"வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" என்ற சாதனையைப் படைக்க அடுத்த 100 நாட்கள் இளைஞர் அணித் தம்பிமார்கள் களத்தில் இருந்து, உழைப்பதற்கு நாங்கள் தயார், தயார், தயார் என்று தலைவரிடத்தில் உறுதி கூறுகிறோம். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றோர்!

அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எ.வ.வேலு, ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தா.மோ.அன்பரசன், ராஜேந்திரன், சக்ரபாணி, ராணிபேட்டை காந்தி, மா.சுப்பிரமணியன், மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, ஆவடி நாசர், கழக துணைப் பொதுச் செயலாளர்கள் பொன்முடி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பிச்சாண்டி, சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, இறையன்பன் குத்தூஸ், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, திணை நிலவாசிகள் நாடகக் குழுவைச் சேர்ந்த நண்பர்கள், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், எஸ்.ஜோயல், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ்,தாட்கோ தலைவர் இளையராஜா, அப்துல் மாலிக், இன்பா ரகு, சீனிவாசன், ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார், திருவண்ணாமலை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.என்.அண்ணாதுரை, இளைஞர் அணி அமைப்பாளர் நரேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, சரவணன், அம்பேத்குமார், ஜோதி, மாநகர மேயர் நிர்மலா கார்த்திக் வேல்மாறன், மருத்துவ அணி மாநிலத் துணைத் தலைவர் மருத்துவர் எ.வ.வேலு கம்பன் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.